செயல்படுகின்ற நிறுவனங்கள் இருக்குமேயானால், தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்து, இதைப்போல நடத்திக்கொண்டிருக்கிறோம், முதியோர் இல்லம் நடத்தப் போகிறோம் என்று கருத்துரு அனுப்பினால், அதை ஏற்றுக்கொண்டு, அரசு தீவிரமாக ஆய்ந்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *269*, திரு. கே.என். இலட்சுமணன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-35

269—

புதிய பேருந்து வழித்தடங்கள்

***12858—திரு. கே.என். இலட்சுமணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாப்பூர் தொகுதி, காமராசர் சாலை, ஆர்.கே. நகர், இராஜா அண்ணாமலைபுரம், சீனிவாசா அவின்யூ, கோவிந்தசாமி நகர் மற்றும் நாராயணசாமி தோட்டம் வழியாக புதிய வழித்தடங்களில் பேருந்து விடுவதற்கான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) தற்போது இயங்கும் பேருந்துத் தடம் எண் 5-ன் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காமராசர் சாலை, ஆர்.கே. நகர், சேமியர்ஸ் சாலை, காளியப்பா மருத்துவமனை வழியாக பொதுமக்களின் தேவைக்கேற்ப போதுமான பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவ்வழித்தடப் பேருந்துகளை இராஜா அண்ணாமலைபுரம், சீனிவாசா அவின்யூ, கோவிந்தசாமி நகர் போன்ற பகுதி மக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். நாராயணசாமி தோட்டப் பகுதி மக்கள், இராமகிருஷ்ணா மடம் சாலை வழியாக இயங்கும் பேருந்துகளைப்

2002 மே 2]

பயன்படுத்திக்கொள்ளலாம். மேற்கூறிய வழித்தடங்களில் பயணிகளின் பயன்பாடு மிகவும் குறைவாக உள்ளதால் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்க சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) வழித்தடம் 5-ல் பயணிகள் பயன்பாடு மிகவும் குறைவாக உள்ளதால் இவ்வழித்தடத்தில் பேருந்துகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க இயலவில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.என். இலட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாப்பூர் தொகுதி, மக்கள் நெரிசல் நிறைந்த பகுதி. அத்துணை அமைச்சர்களும் குடியிருக்கின்ற விடுதிகளுள்ள இடம். விடுதிகள், பங்களாக்கள் இருக்கின்ற இடம். பொதுமக்களெல்லாம். ஏழை மக்கள் எல்லாம் அமைச்சர்களைப் பார்க்க வேண்டுமென்றால், பேருந்துகளை மட்டுமே நம்பி வருகின்ற இடம். அதுமட்டுமல்ல. கோயில் குளங்கள் நிறைந்த பகுதி. மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப்போல, பேருந்துகள் இருக்கின்றன. ஆனால் அது 10 சதவிகித நெரிசலைக்கூட சந்திக்க முடியாமல் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே காமராசர் சாலை, ஆர்.கே. நகர் மற்றும் இராஜா அண்ணாமலைபுரம் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மயிலாப்பூர் தெப்பக்குளத்திற்கோ அல்லது தியாகராய நகருக்கோ, எழும்பூருக்கோ போவதற்கு உரிய, அதிக பேருந்துகளை விடவேண்டுமென்றும்—அந்தப் பகுதியிலே 5 ஆம் எண்ணுள்ள பேருந்து வசதி மிகவும் குறைவு—இத்தடத்தில் 5 ஆம் எண்ணுள்ள பேருந்துகளை இன்னும் அதிகமாக விட வேண்டும் என்றும், தரமணி—மயிலாப்பூர் 5-கே, அந்தத் தடத்தில் ஒரே ஒரு பேருந்துதான் சென்றுகொண்டிருக்கிறது. அது மக்களுக்கு அறவே போதாது. ஆகவே அதிலும் அதிகப் பேருந்துகளை விட வேண்டும்.

மேலும் பேருந்து எண் 4-இ, அந்தத் தடத்தில் சென்றுகொண்டிருந்தது. என்ன காரணத்தாலோ அது நிறுத்தப்பட்டு இருக்கிறது. ஒரு பேருந்துகூட அந்தத் தடத்திலே இப்போது இல்லை. அதை மீண்டும் நீங்கள் விட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும், 23-B பேருந்து அந்தத் தடத்திலே காலையில் ஒரு நடையும், மாலையில் ஒரு நடையும்தான் சென்றுகொண்டிருக்கிறது. அதைச் சரிசெய்ய வேண்டுமெனவும்,

[2002 மே 2

அடையாறிலிருந்து மேலே சொன்ன காமராசர் சாலை, ஆர்.கே. நகர், இராஜா அண்ணாமலைபுரம் வழியாக 29-சி அல்லது 5-B பேருந்து, மயிலாப்பூர் தெப்பக்குளத்திற்கு வந்தடையுமாறு நம்முடைய தமிழக அரசு போக்குவரத்துத் துறை செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் வழித்தடம் 5-ல் போதுமான அளவிற்கு பேருந்துகள் இயக்கப்படுவதில்லை, பயண நடைகளைக்கூட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் காமராசர் சாலை, ஆர்.கே. நகர் வழியாக வழித்தடம் 5-ல் ஆறு பேருந்துகள் 96 நடைகள் இயக்கப்படுகின்றன. இந்த 96 நடைகளே அந்தப் பகுதி மக்களுக்குப் போதுமான அளவில் இருக்கிறது என்பதை அவருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மேலும் அந்த வழித்தடத்தில் கூடுதலாகப் பேருந்துகளை இயக்கினால் இன்னும் அந்தப் பகுதி மக்கள் பயனடைவதற்கு வசதியாக இருக்குமென்று கேட்டார். அந்தப் பகுதி மக்களுடைய தேவைக்கு அதிகமாகவே இப்போது இயக்கப்படுவதாக ஒரு கருத்து இருக்கிறது. ஆகவே மேலும் கூடுதலாக அந்தப் பகுதியில் இயக்கத் தேவையில்லை என்பதை அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 4-E, 1-G ஆகிய வழித்தடத்தில் இயக்கப்பட்ட பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்குவதுபற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் மற்றும் 4-சி வழித்தடத்திலும் மற்றும் 5-கே-யில் ஒரே ஒரு பேருந்துதான் ஓடுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒரு பேருந்துதான் அதில் ஓடினாலும்கூட, பன்னிரண்டு நடைகள் அதில் இயக்கப்படுகின்றன. ஆகவே அந்தப் பகுதி மக்களுக்கு அது போதுமானதாகக் கருதப்படுகிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிலே இன்னும் ஒரு கூடுதல் பேருந்து இயக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதை அரசு பரிவோடு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.